கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2014/2015 (ஆகஸ்ட் 2020)

# TLS 4133 தமிழில் இதழியல் வளர்ச்சி
# (Development of Journalism in Tamil)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து **இரண்டு** வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

## பகுதி I

1. (அ). 'செய்தி' என்றால் என்ன? செய்தி அமைப்பின் ( News Structure) முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக? (08 புள்ளிகள்)

   (ஆ). செய்தியின் இயல்புகளையும் செய்தியாசிரியரின் (Reporter) பண்புகளையும் சுருக்கமாகத் தருக? (12 புள்ளிகள்)

2. (அ.) இலங்கை அரசியல் யாப்பில் வெளியீட்டுச் சுதந்திரம் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகிறது? (10 புள்ளிகள்)

   (ஆ) இலங்கைப் பத்திரிகைச் சபைச் சட்ட ஒழுக்கக் கோவையின் பிரதான அம்சங்கள் எவையெனக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக் குறிப்பு எழுதுக.

   (அ) தமிழ் இதழியியலின் தோற்றம், வளர்ச்சி
   (ஆ) பத்திரிகை நிறுவனமொன்றின் நிர்வாக அமைப்பு
   (இ) செய்திச் சிறப்புக் கட்டுரை (News feature Article)
   (ஈ) 'பத்தி எழுத்து' அல்லது 'சித்திரிப்பு எழுத்து'
   (உ) கருத்துப் படங்களும் கேலிச்சித்திரங்களும்

   (10x2 புள்ளிகள்)

## பகுதி II

4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் தமிழில் பத்திரிகைகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களை விளக்குவதோடு அவை ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக் குறித்தும் ஆராய்க. (20 புள்ளிகள்)

5. பக்க வடிவமைப்பின் (Page Layout) முக்கியத்துவத்தை இலங்கையில் வெளிவரும் ஏதாவதொரு தமிழ்ப் பத்திரிகையினை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

6. பத்திரிகையில் ஆசிரியத் தலையங்கத்தின் (Editorial) முக்கியத்துவத்தை விளக்கி, உம்மை ஒரு பத்திரிகை ஆசிரியராகக் கருதிக் கொண்டு இலங்கையில் இன்று முக்கியமாகக் கருதப்படும் ஏதாவதொரு விடயம் தொடர்பாக ஆசிரியத் தலையங்கம் ஒன்றை எழுதுக.

(20 புள்ளிகள்)

7. வளாக இதழ்களை (House Journals) வகைப்படுத்தி, மக்கள் தொடர்பியலில் அவற்றின் பங்கினை விளக்குக.

(20 புள்ளிகள்)